RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt21420

OPEN ACCESS

# குறுந்தொகையில் மண்ணும் மரபுகளும்

**இரா. சதாசிவம் [அ, *]**

[அ] தமிழியல்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், தமிழ்நாடு, இந்தியா.

# Soil and Traditions in Kurunthagai

**R. Sathasivam [a, *]**

[a] Department of Tamil Studies, Annamalai University, Annamalai Nagar, Tamil Nadu, India

* Corresponding Author: sathasivambothi@gmail.com

Received: 14-07-2021
Revised: 13-09-2021
Accepted: 16-09-2021
Published: 01-10-2021

Check for updates

**ABSTRACT**

Kurunthogai poems have spoken a lot about the soil and people of ancient Tamil Nadu. Soil and soil based biological traditions have become the subject of the song. Soil is not only a dwelling place in a material State but can also occur as an object o ownership. The human race, which has constructed its life from the life of an animal, has made safe places its habitat like that of animals. His wild life set the stage for the ariliseel beginning of human life. The man who started lring down the mountain took the forest as his abode. It was through the mangroves that mankind reached the pinnacle of civilization, creating the art of taming the forest. The coastline, which is a see and sea-based place is greatly depicted in the contest of the weaving land. The area where the soil is found to be less suitable for human habitation is causing the sand duties to be evacuated by the dairy people thus murder and robbery are shown as normal occurrences in the region.

**Keywords:** Soil and heritage, Kurunji soil and heritage, Mullai soil and heritage, Marutham soil and heritage, Neithal soil and heritage

## முன்னுரை

தமிழ்க்கவிதைகளில் தொன்மையானதும், செம்மைப் பொருள் சிறந்து விளங்குவதும் சங்க இலக்கியம் ஆகும். ஆழ்ந்த சிந்தனை, தெளிவான கருத்துச் செறிவு, நிறைவான பட்டறிவு, உயர்ந்த நோக்கு ஆகிய கூறுகளைச் சங்கப் பாடல்களில் பரக்கக் காணலாம். கவிதையின் தன்மை, பொருள், நுண்மை, கவிதையாக்கப் போக்குகள் முதலானவற்றில் செம்மாந்த சிறப்புடையவர்களாகச் சங்கக் கவிஞர்கள் விளங்குவதனை அவர்களது படைப்பாக்கம் வெளிப்படுத்தி நிற்கிறது.

சங்கச் செவ்வியல் பாடல்கள் பண்டைத்தமிழக மண்ணையும் மக்களையும் வெகுவாகப் பேசியுள்ளன. மண்ணையும் மண் சார்ந்த வாழ்வியல் மரபுகளையும் பாடற் பொருளாக்கியுள்ளன. சங்க அகப்பாடல்களில் நிலமும் பொழுதும் முதற்பொருளாக அமைந்திருப்பது அறியத்தக்கதாகும். மண்ணை முதன்மைப்படுத்தி அதன்வழி வாழ்வியல் மரபுகளை உருவாக்கிய சிறப்புக்கு உரியவர்கள் சங்கப் புலவர்கள் என்பதை மையப்பொருளாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது

## மண்ணும் மரபுகளும்

மண் என்பது பொதுநிலையில் பூடகப்பொருளாகக் கொள்ளாமல் அதனை மக்கள் வாழ்வின் தலைமைப்பொருளாகக் கண்டது பண்டைத்தமிழகம் ஆகும். மண்ணாசையால் பூசல்களும், போர்களும்,

பிரிவினைகளும் நிகழ்ந்ததைப் புறப்பாடல்கள் வழியாக அறியலாம். மண் என்பது குறியீட்டுப் பொருளாகவும் அமைந்துள்ளதனைச் சங்கப் பாடல்கள்வழியாக அறியலாம்.

மண்/நிலம் என்பது பொருள்பொதிந்த நிலையில் மக்கள் வசிப்பிடம், வாழிடம் என்பதோடு மட்டுமல்லாது அது உரிமைப் பொருளாகவும் திகழக்கூடியது. பல்வேறு பொருண்மைகளைக் குறியீடாகவும் வெளிப்படுத்தக் கூடியது. அதனால்தான் சங்க அகப்பாடல்கள் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்ற மண் சார்ந்த நிலங்களைப் பின்னணியாகக் கொண்டு படைக்கப்பட்டிருக்கின்றன. மனித வாழ்வின் ஒவ்வொரு நிலைப்பாடுகளை இந்நிலங்கள் குறியீடாக உணர்த்துகின்றன. நிலமும் பொழுதும் சங்கப்பாடல்களின் சிறப்புக்கூறுகளில் ஒன்று. இந்த நிலங்களை வாசகன் கண்முன் நிறுத்துவதற்கு அவர்கள் கையாண்ட உத்திகள் அவர்களது கவிதையாற்றலின் சிறப்பினை எடுத்துரைப்பனவாய் அமைந்திருக்கின்றன.

## குறிஞ்சி - மண்ணும் மரபும்

மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி நிலமாகும். விலங்கின வாழ்க்கையிலிருந்து தன் வாழ்க்கையைக் கட்டமைத்துக் கொண்ட மானுட இனம், விலங்குகளைப் போன்று பாதுகாப்பு மிகுந்த மேட்டிடங்களைத் தம் வாழ்விடமாகக் கொண்டு அமைந்தது. அவ்வகையில் அமைத்துக் கொள்ளப் பெற்றதே மலையும், மலைசார்ந்த நிலப்பரப்புமாகும். மலை சார் வாழ்க்கை அவர்தம் வாழ்வியலோடு பொருந்தவரும் ஒன்றாகவும், அதன்வழி பண்பாடு உருவாக்கப் பெற்ற ஒன்றாகவும் விளங்குவதனைக் காணமுடிகிறது. சான்றாக,

“அகவன் மகளே அகவன் மகளே

மனவுக் கோப்பன்ன நன்னெடுங் கூந்தல்

அகவன் மகளே பாடுக பாட்டே

இன்னும் பாடுக பாட்டே அவர்

நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே” (குறு. 21)

என்னும் குறிஞ்சியின் நெடுங்குன்றம் சிறப்பிக்கப்பட்டுள்ளது. இதில் குறிஞ்சி நிலத்தைப் பற்றிய குறிப்புகளன்றி வேறு எதுவும் குறிக்கப்படவில்லை. மண் உயர்ந்த தன்மைகொண்டது என்பதும், குன்றம் எல்லோராலும் காணத்தக்கது என்பதும், வணங்கி மகிழத் தக்கது என்பதும் இதன்வழி அறிவுறுத்தப்படுகிறது. இதில் ‘அவர் நன்னெடுங் குன்றம்’ என்னும் தொடர் வெளிப்படையாக முருகனது குன்றத்தையும், தலைவன் குறிஞ்சி நிலத்திற்குரியவன் என்பதனையும், புலப்படுத்தி நிற்கிறது. இப்பாடலில் நிலப்பின்னணியான ‘குன்றம்’ தலைவனைக் குறியீடாகக் காட்சிப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதனை அறியலாம் (Swaminathar, 1989).

## முல்லை - மண்ணும் மரபும்

காடும் காடு சார்ந்த இடமும் முல்லை நிலமாகும். மானுட வாழ்வின் நாகரிகத் தொடக்கத்திற்குக் களமாக அமைந்தது அவனது காட்டு வாழ்க்கையே. மலையினின்று கீழிறங்கி வாழத் தொடங்கிய மனிதன் காடுகளையே தன் வசிப்பிடமாகக் கொண்டான். இதனால் காடு சிறப்பிக்கப் பெறும் பகுதியாக அமைந்தது. தொன்மைச் சமுதாயத்தின் இருப்பிடமாகக் கருதப்படும் முல்லை நிலத்தில் கால்நடைகளைச் சார்ந்த மக்கள் வாழ்நிலை புலப்படுத்தப்படுதலைக் காண்கிறோம்.

“பல்லா நெடுநெறிக் ககன்று வருந்தெனப்

புன்றலை மன்ற நோக்கி மாலை

மடக்கட் குழவி யணவந் தன்ன

நோயே மாகுத லறிந்துஞ்

சேயர் தோழி சேய்நாட் டோரே.” (குறுந். 64)

என்னும் பாடலில், பசுக்கள் தம் இரையைத் தேடி நெடிய இடத்திற்குச் சென்றனவாக, மாலைநேரம் வந்துற்றதால் அதன் கன்றுகள் தத்தம் தாய்ப்பசுக்களைத் தேடி வருந்திக் காத்திருத்தல் போலத், தலைவியும் தலைவன் வரவை எதிர்நோக்கிக் காத்திருந்த செய்தி புலப்படுத்தப்பட்டுள்ளது (சாமிநாதையர், 1989). இதில் பசுக்கள் நீண்ட தூரத்திற்குச் சென்று இரைதேடப் போகும் செய்தியும், அவற்றின் கன்றுகள் காத்திருந்த செய்தியும் முல்லைநிலப் பின்னணியோடு சித்திரிக்கப்பட்டுள்ளதனை அறியலாம். தலைவி, தலைவனது வருகைக்காகக் காத்திருக்கும் பண்பாட்டுச் சிறப்பினை உணர்த்துவதற்கு இங்கு பசுக்கூட்டங்களின் வாழ்க்கை ஒப்பீடாக அமைகிறது. மனித நாகரிகத்தின் இருத்தலியல் பண்பு இதன்வழி உருவாக்கப்படுகிறது

## மருதம் - மண்ணும் மரபும்

வயலும் வயல்சார்ந்த இடமும் மருதநிலமாகும். காடுகளைத் திருத்தி, கழனிகளை உருவாக்கிக் கொண்ட மனித இனம், நாகரிகத்தின் உச்சம் பெற்றது மருதநிலத்தின்வழியினதே ஆகும். காடுகள் கழனிகளாக மாற்றம் பெற்றமை மானுடத்தின் அறிவியல் வளர்ச்சியின் பொருட்டே ஆகும். அறிவியலறிவும், உலகியல் இன்ப நுகர்வும் மருதநிலத்தின் பண்பாட்டு வளர்ச்சிக்கு இடமளித்தது.

செல்வ வளம் பொருந்திய மக்கள் வாழிடமாக அமைந்தது மருதநிலம். உடைமைச் சமுதாயத்தின் இருப்பிடமாகக் கருதப்படும் மருதநிலம் கால்நடைச் சமூகத்திலிருந்து உழுகுடிச் சமூகமாக மாற்றம் பெற்ற நிகழ்வினை,

“மலைகண் டன்ன நிலைபுணர் நிவப்பின்

பெருநெற் பல்கூட்டு எருமை உழவ;

கண்படை பெறாஅது, தண்புலர் விடியல்,

கருங்கண் வராஅல் பெருந்தடி மிளிர்வையொடு

புகர்வை அரிசிப் பொம்மற் பெருஞ்சோறு

கவர்படு கையை கழும மாத்தி

நீர்உறு செறுவின் நாறுமுடி அழுத்த நின்

நடுநரொடு சேறிஆயின், அவண்

சாயும் நெய்தலும் ஓம்புமதி, எம்மில்

மாஇருங் கூந்தல் மடந்தை

ஆய்வளைக் கூட்டும் அணியுமார் அவையே.” (நற். 60)

எனும் பாடல் கட்டமைக்கிறது. இதில் வளப்பம் பொருந்திய மருதநிலப் பின்னணி எடுத்துரைக்கப்படுகின்றது. இப்பாடலில் தலைவன் சிறைப்புறமாக நிற்கின்றான். அப்பொழுது தோழி உழவர்களுக்குக் கூறுவது போலத் தலைவி இற்செறிக்கப்பட்டு விட்டாள் என்பதனையும் ஆகவே, நீ விரைவில் திருமணம் செய்துகொள் என்பதைத் தலைவனுக்கு மறைமுகமாக உணர்த்துகின்றாள். பாடலின் கருத்து ஒருபுறம் இருப்பினும் இதில் மருதநிலக் காட்சி சிறப்புறச் சித்திரித்துக் காட்டுவது

அறியத்தக்கதாகும். பண்பாட்டு என்பது மானுடவாழ்வின் தொழிலியல் சார்ந்தும் அமைவது ஆகும் என்பது இதன்வழி காட்டப்பெறுகிறது.

வளம்பொருந்திய உழவர்கள் வாழ்க்கை நிலையும், உழவர்கள் அதிகாலையில் எருமையை ஓட்டிக்கொண்டு உழுதலுக்குச் செல்லுதலும், நீர் நிறைந்த வயல்களில் நாற்று நடுதலும் ஆகிய மருதநில மக்களின் வாழ்க்கை நிலப்பின்னணியில் சித்திரித்துக் காட்டப்பட்டுள்ளன.

## நெய்தல் - மண்ணும் மரபும்

மலையில் உருவாகும் நீர் கடலோடு கலக்கும் இடம் கழிமுகம் ஆகும். இத்தகு கழிமுகப் பகுதிகளைக் களமாகக் கொண்டு தம் வாழ்க்கையை அமைத்துக் கொண்ட மானுட சமுதாயமே நெய்தல் நிலமாக அமைந்தது.

நெய்தல் நிலப்பின்னணியில் கடலும் கடல்சார்ந்த இடமுமான கடற்கரைச் சார்பே பெரிதும் சித்திரிக்கப்படுகின்றது. கடலிடை எழும் அலைகள் கரையொடு மோதிப் பொருந்துவதாகப் பல பாடல்களில் கடலின் ஓசை சித்திரிக்கப்படுகின்றது. இவ்வலை ஓசையினால் இரவிலும் பகலிலும் இந்நிலங்களில் அமைதி என்பது இல்லை; அதுபோன்றே தலைவியின் உள்ளத்திலும் அமைதியில்லை; அதனால், தூக்கமில்லை என்பதனை,

“யார் அணங்குற்றனை கடலே! பூழியர்

சிறுதலை வெள்ளைத்தோடு பரந்தன்ன

............................................................

நள்ளென் கங்குலும் கேட்கும் நின்குரலே!” (குறுந். 163)

என்னும் பாடல் எடுத்துரைக்கின்றது (சாமிநாதையர், 1989). இதில், ‘இரவில் ஊர் முழுவதும் ஒலி அடங்கி இருக்க நீ மட்டும் ஓயாது ஒலித்துக் கொண்டுள்ளாய்; நீயும் என்னைப் போல் யாரால் வருத்தமுற்றனை’ என்று தலைவி, கடலை விளித்துக் கேட்கின்றாள். இப்பாடலில் கடலும் கடல் சார்ந்த இடமும் நிலப்பின்னணியாகச் சித்தரிக்கப்படுவ தோடல்லாமல் அது கருத்துப் புலப்பாட்டுக்கும் பயன்படுத்தியுள்ளதனை அறியலாம்.

## பாலை - மண்ணும் மரபும்

மக்கள் வாழிடத்திற்குத் தகுதியற்றதாகவும், மண் வளம் குறைந்ததாகவும் அமைந்த பகுதி பாலை என்றழைக்கப் பெற்றது. வறுமையும், வறட்சியும் நிறைந்த நிலம் பாலை. பாலை என்பது முல்லையும் குறிஞ்சியும் முறைமை திரிந்த நிலப்பகுதி என்பது புலவர் கருத்து. ஆதலால், இதில் வறண்ட காட்டுப்பகுதியும், வறட்சியும், மக்கள், விலங்குகளின் துயரமான வாழ்நிலையும் பின்னணியாகப் படைக்கப் பெறுவது இயல்பான ஒன்றாக உள்ளது. வளமை குறைந்து மக்கள் வாழ்வதற்குத் தகுதியற்றதாகி, ஊரைவிட்டு விலகிப் போன மண்மேட்டில் அணில்கள் விளையாடும் நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்ட இழிநிலையினை,

“காதல ருழைய ராகப் பெரிதுவந்து

சாறுகொ ளூரிற் புகல்வேன் மன்ற

அத்த நண்ணிய வங்குடிச் சீறூர்

மக்கள் போகிய அணிலாடு முன்றிற்

புலப்பில் போலப் புல்லென்

றலப்பென் றோழியவ ரகன்ற ஞான்றே.” (குறுந். 41)

என்னும் பாடல் காட்சிப்படுத்துகிறது (சாமிநாதையர், 1989). மக்கள் தங்கள் இருப்பிடங்களைவிட்டுப் புலம்பெயர்ந்து செல்வதற்கு மண்ணின் வளக்குறைவே காரணமாக அமைகிறது. இதனால் இப்பகுதியில் கொலையும், கொள்ளையும், வழிப்பறியும் இயல்பான நிகழ்வுகளாக இருப்பது காட்டப்படுகிறது. இப்பாடலில், புலம்பெயர்ந்து நீங்கிய மக்கள் வாழிடங்கள் தற்போது அணில்கள் விளையாடுவதற்குக் களமாகியதைப் போல, தலைவியின் நிலையும் உள்ளது என்பதனை உவமை காட்டுவதற்கு நிலப்பின்னணி பயன்பட்டுள்ளது.

இவ்வாறு சங்கப் புலவர்கள் தமது பாடுபொருளுக்கு ஏற்றவாறு மண் சார்ந்த நிலங்களைப் பின்னணியாகக் கொண்டு தமது கவிதைகளைப் படைத்துள்ளனர் என்பது தெளிவாகிறது. மண்ணின் வளம் வளத்தைக் காட்டுவதற்கும், மண்ணின் விளைச்சல் வளமைக்காட்டுவதற்கும், பொலிவைக் கூட்டுவதற்கும், மண்ணின் வறட்சி வறுமையைக் காட்டுவதற்கும் இடமளித்துள்ளதனை இப்பாடல்கள் நமக்கு உணர்த்துகின்றன. அவை காட்சிச்சித்தரிப்பு என்பதோடு மட்டுமல்லாது, கருத்துப் புலப்பாட்டுக்கும் பயன்படுத்தப்பட்டுள்ள திறம் சிந்தனைக்கு உரியதாக அமைந்துள்ளது. தனது பாடுபொருளுக்கேற்ற சூழலை இவ்வாறு அமைத்துக் கொள்வதன் மூலம் சங்கக் கவிஞர்கள் தாம் விரும்பிய உணர்வினைச் சூழலோடு விளைக்கின்றனர். மேலும், ஏற்ற இடங்களில் ஏற்ற சொற்களைத் பயன்படுத்தி வெற்றி கண்டுள்ளனர்.

“தகுந்த சூழலையும் பின்புலத்தையும் கற்பனை செய்து கொள்ள முடியாத போது தான் கவிஞன் தோல்வி அடைகிறான்”. (Marudhanayagam, 2008) இவ்வாறான தோல்வி என்பது சங்கக் கவிஞனுக்கு ஏற்படவில்லை என்பதற்கு அவன் தனது சூழலுக்குத்தக அமைத்துக்கொண்ட மண் சார்ந்த நிலப் பின்புலமும் ஒரு கருவியாக அமைந்திருந்துள்ளது.

“உவமைகளாகவோ, உருவகங்களாவோ அல்லது காட்சி உருக்களாகவோ பயன்படுத்தப்படுபவை எல்லாம் நாம் அன்றாட வாழ்க்கையில் காணுகின்ற பொருள்களாக இருத்தல் சிறப்பென்றும், இல்பொருள் உவமைகள் அவ்வளவு பீடு உடையன அல்லவென்றும், எந்தக் கருத்தையும் கருத்தாகவே கூறிவிடாது காட்சி உருவின் மூலம் மனக்கண்ணிற்கு ஓவியமாக்கித் தருதலே கவிஞனின் கடமையென்றும் மேலைநாட்டுத் திறனாய்வாளர்கள் கூறுவர்” இத்தகு சீர்மை பொருந்திய பாடல்களாகச் சங்கப்பாடல்கள் திகழ்வதனை அறியலாம் (Marudhanayagam, 2008). தேவையற்ற சொற்களைப் பயன்படுத்துதலோ, மிகைக் கற்பனையோ சங்கக் கவிஞனுக்கு உடன்பாடன்று. நிலமும் பொழுதும், கரு, உரிப்பொருள்களும் அவனறிந்த தோடல்லாமல் அவனது வாசகனும் அறிந்திருந்த பொருளாகக் காட்டுவதில் அவர்கள் மிகுதிறன் கொண்டவர்களாக விளங்குவது சங்கப்பாடல்களின் தனிச்சிறப்பு.

இங்ஙனம், சங்க இலக்கிய நிலப்பின்னணியானது, சங்ககால மக்கள் இயற்கையோடியைந்து, அதற்குத்தக வாழ்ந்த சமூகத்தினையே சித்திரிக்கின்றது. அவை “நிலச் சூழ்நிலைகளே தமிழ் மக்களின் வாழ்க்கையையும் இலக்கியத்தையும் உருப்படுத்தின” என்னும் கருத்தினை வெளிப்படுத்துவ-தாக அமைந்திருப்பதனை அறியமுடிகிறது (Manickanar, 1990).

## முடிவுரை

சங்கப் புலவர்கள் காட்சியுருக்களுக்கு அளித்த சிறப்பும், மக்கள் அன்றாட வாழ்வில் காணுகின்ற எளிய பொருள்களையே உவமையாக்குகின்ற சிறப்பும் சங்கச் செவ்வியலின் கூறுகளில் ஒன்றாகும். உள்ளுறை உவமம், ஏனை உவமம் ஆகியவைகட்கெல்லாம் அவ்வந் நிலத்து மண்ணைக் கருவாகக் கொண்டு எழும் கருப்பொருள்களைப் பயன்படுத்திக் கொள்ளலே பழந்தமிழ் மரபாகும்.

நிலம் என்பதனைச் சித்திரிக்கும்போது அந்நிலவியற்கையைக் குறிப்பதோடு மட்டுமல்லாது அந்நில மக்களின் வாழ்க்கை, தொழில், பண்பாடு முதலானவற்றையும் எடுத்துரைப்பது படைப்பாக்கக் கூறுகளில் ஒன்றாக அமைந்திருக்கின்றது.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை போன்ற ஐந்து நிலங்களின் அமைப்பும், அவ்வந்நிலங்களின் உரிப்பொருள்களுடன் இயைந்து நின்று சிறப்பிப்பதுடன், மக்களின் தொழில் முறை

போன்ற வாழ்க்கை அமைப்பினையும் சுட்டி நிற்கிறது. நிலப்பின்னணிக்கு ஏற்ப அமைந்துள்ள சங்க மக்களின் சமுதாய வாழ்க்கை அமைப்பும் அகப்பாடல்களின் பின்னணியாக அமைந்திருப்பதனை அறியமுடிகின்றது.

## References


Manickanar, Va. Suba., (1990) Tamil kadhal, Manivasagar Pathippakam, Chennai, India.

Marudhanayagam, P., (2000) Sanga Sevviyal, World Tamil Research Centre, Chennai, India.

Swaminathar, U. V., (1989) Kurunthogai Moolamum Uraiyum, Annamalai university, Chennai, India.



**Funding:** NIL

**Acknowledgement:** NIL


**Conflict of Interest:** NIL

**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License